பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 14 ஞாயிற்றுக்கிழமை (30 08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily சுடர் 276

# கடற்படை நவீன விசைப்படகை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்

## மண்டைதீவுப் பகுதியில் கடற்புலிகள் தீர சாதனை

யாழ்ப்பாணம், ஆக. 30

ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான நவீனரக விசைப்படகு ஒன்றை விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை கைப்பற்றினர்.

மண்டைதீவு கூட்டு இராணுவக் கடற்படைத் தளத்தில் தரித்து நின்ற விசைப்படகை கடற்புலிகள் கைப்பற்றி தீரமிகு சாதனை ஒன்றைப் புரிந்தனர்.

நேற்று அதிகாலை 1. 30 மணியளவில் கடற்புலி வீரர்களின் தாக்குதல் அணி ஒன்று, மண்டைதீவு கூட்டு இராணுவ கடற்படைத் தளம் மீது திடீரென ஊடுருவி, மின்னல் வேக அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தி இப்படகை கைப்பற்றினர் என அறிவிக்கப்பட்டது.

புலிகளின் மின்னல் வேகத் தாக்குதலில் பல கடற்படையினர் காயமடைந்தனர். தாக்குதலை அடுத்து விசைப்படகை விடுதலைப் புலிகள் கைப்பற்றி தம்முடன் எடுத்து வந்தனர்.

சுமார் ஐம்பது பேர் பயணம் செய்யக் கூடிய இந்த விசைப்படகு பல கோடி ரூபா பெறுமதிமிக்கது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## படகில் கைப்பற்றியவை

நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் கைப்பற்றிய கடற்படைப் படகிலிருந்து ஒரு தொகுதி ஆயுதத் தளபாடங்கள் மீட்கப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு:-

- ★ 50 கலிபர் துப்பாக்கிக்குரிய மேலதிக சுடுகுழல் — 1
- ★ 50 கலிபர் ரவைகள் — 1000
- ★ 50 கலிபர் துப்பாக்கியில் பொருத்தப்படும் விமான எதிர்ப்புக் குறிகாட்டி
- ★ தரைத் தாக்குதலுக்கான தொலைநோக்கிக் குறிகாட்டி
- ★ நடுத்தர ரவைகள் — 1,500
- ★ கைக்குண்டுகள் — 10
- ★ உயிர்காப்பு மிதவை உடை — 75

[உ-5]

## படகு பற்றிய தகவல்கள்

யாழ்ப்பாணம், ஆக. 30

விடுதலைப் புலிகள் நேற்று கைப்பற்றிய கடற்படையினரின் விசைப்படகில் 250 குதிரை வலுவுடைய — அமெரிக்கத் தயாரிப்பான — இரு ஜெட் இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

புலிகளிடம் தாம் பறி கொடுத்த கண்காணிப்புபடகு பிரிட்டிஷ் தயாரிப்பான "கூகா" ரகத்தைச் சேர்ந்தது என கொழும்பில் ஸ்ரீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் படகில் இரண்டு மோட்டார்கள் பொருத்தப்பட்டிருந்ததை அவ்வட்டாரங்கள் ஒப்புக் கொண்டன, ஒரு 20 எம். எம். இயந்திரத் துப்பாக்கியும் அதில் இருந்ததாகக் கூறப்பட்டது.

12 அடி அகலமும், 42 அடி நீளமும் கொண்ட இந்தப் படகு மிகக் குறைந்த ஆழமுள்ள நீரிலும் இழித்துக் கொண்டு செல்லக் கூடியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆழம் குறைந்த நீரேரிப் பகுதிகளில் பாவிப்பதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட இந்தப் படகில் தொலைத் தொடர்பு சாதனங்கள், நவீன திசை காட்டிக் கருவிகள் போன்றவையும் பொருத்தப்பட்டிருந்ததாகத் தெரியவந்தது.

படகின் கபினின் அகலம் சுமார் ஐந்தரை அடி. கபினின் உயரம் சுமார் 7 அடி.

இப்படகில் ஐம்பது கலிபர் துப்பாக்கி பொருத்தும் சுழல்மேடை ஒன்றும் காணப்பட்டது.

## காடையர் குழு ஒன்றினால் லலித் தாக்கப்பட்டார்!

### தெகிவளையில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு, ஆக. 30

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய பிரமுகரும் முன்னாள் அமைச்சருமான லலித் அத்துலத் முதலி நேற்று காடையர் குழு ஒன்றினால் தாக்கப்பட்டார்.

ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிரான கையெழுத்து சேகரிக்கும் இயக்கப் பிரசாரத்தை நேற்று தெகிவளையில் அவரும் அவரது குழுவினரும் நடத்திக் கொண்டிருந்த

[5 ஆம் பக்கம் பார்க்க]

### தாக்குதல் நடத்திய 6பேரின் விவரம் பொலீஸிடம்!

லலித் அத்துலத்முதலி மீது தாக்குதல் நடத்திய— காடையர் குழுவில் ஆறுபேர் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் —

அவர்கள் பற்றி தெகிவளைப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

தாக்குதல் நடத்திய பின்னர் காடையர் குழு தாம் வந்த வானைக் கைவிட்டு விட்டு தப்பி ஓடி விட்டதாகவும் —

அதனைத் தமது மெய்ப் பாதுகாவலர்கள் கைப்பற்றி உள்ளதாகவும் லலித் அத்துலத் முதலி பின்னர் தெரிவித்தார். [உ-10]

## பிரேமாவுக்கு எதிராக நடந்த எதிரணிக் கூட்டத்தில் குறைந்த எண்ணிக்கையினர்

கொழும்பு, ஆக. 30

எதிர்க்கட்சிகள் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமையன்று கொழும்பில் நடத்திய கூட்டத்தில், மிகக்குறைந்த எண்ணிக்கையான மக்களே கலந்து கொண்டனர் என்று பி. பி. ஸி. அறிவித்தது.

கம்பெல் பார்க்கில் இடம் பெற்ற அரச எதிர்ப்புக் கூட்டத்தில் சுமார் ஆறாயிரம் பேர் மட்டுமே பங்குபற்றினர் என்றும் —

கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அனுரா பண்டாரநாயக்கா, லலித் அத்துலத் முதலி, காமினி திசாநாயக்க ஆகியோர் உரையாற்றினர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாஸ மீது குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்ட முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டே எதிர்க்கட்சிகள் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ]

## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 30

இரண்டாம் தவணை விடுமுறையின் பின் யாழ். மாவட்டப் பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக நாளை திங்கள் ஆரம்பமாகின்றன.

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் பாடசாலைகள் மற்றும் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் முன்னர் அறிவிக்கப்பட்டபடி நாளை ஆரம்பமாகும் என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் நேற்று தெரிவித்தார். [உ-5]

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 30

தெல்லிப்பழைப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல்தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர். [உ-5]

## யாழ் கரையோரம் மீது ஹெலித் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஆக. 30

நேற்று அதிகாலையிலும் பின்னர் காலை 6 மணியளவிலும் யாழ். நகரின் கரையோரப் பகுதிகள் மீது ஹெலிக்கொப்டர் நோட்டமிட்டுக் கலிபர் துப்பாக்கித் தாக்குதலை நடத்தியது. நேற்று அதிகாலை 1. 30 மணியளவில் பலாலியிலிருந்து வந்த ஹெலி ஒன்று மண்டைதீவு, குருநகர், யாழ். நகர் பகுதிகளை பல தடவைகள் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது.

சுமார் ஒரு மணி நேரம் சுற்றித் திரிந்த ஹெலி கிட்டு வேட்டுக்களையும் தீர்த்தது. ஹெலி சென்ற கையோடு பூநகரி - கல்முனை மண்டைதீவுப் பக்கமாக இருந்து யாழ். நகரின் கரையோரப் பகுதிகள் மற்றும் அரியாலை கிழக்குப் பகுதி நோக்கி ஷெல், மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

பின்னர் மீண்டும் காலை 6 மணியளவில் வந்த ஹெலி நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி தாக்குதலை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். ஆஸ்பத்திரியில் விசர்நாய்கடி தடுப்பூசி மருந்துக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 30

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஏற்புத் தடை ஊசி, விசர்நாய் கடிக்கான தடை ஊசி மருந்து (ஏ. ஆர். வி) ஆகிய முக்கிய மருந்துகளுக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஏற்புத் தடை ஊசி மருந்து கடந்த வெள்ளிக்கிழமையுடன் இருப்புக் குறைந்துவிட்டதாகவும், வெளிநோயாளர் பகுதிக்கு வரும் நோயாளர்களுக்கு அதனை வழங்க முடியாதிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் பிரதேச அரசினர் ஆஸ்பத்திரிகளில் இம்மருந்து சுமாரான அளவில் கையிருப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 30

கடந்த வியாழனன்று மாதகல் பகுதியில் இராணுவத்தினருடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கடும் சமரில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் கேணல் ராஜன் மற்றும் எட்டு வீரவேங்கைகளுக்கு நேற்றைய தினமும் குடாநாட்டில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மறைந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் புரட்சிக் கீதங்களும், சோக கீதங்களும் பல இடங்களிலும் ஒலிபரப்பப்பட்டன.

லெப்டினன்ட் கேணல் ராஜன் உட்பட ஒன்பது வேங்கைகளினதும் திருவுருவப் படங்களைத் தாங்கிய அஞ்சலி ஊர்தி நேற்று யாழ். குடாநாட்டில் வலம் வந்தது. அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கொண்டு வரப்பட்ட மாவீரர்களது திருவுருவப் படங்களுக்கு மக்கள் தமது வீட்டு வாயில்களில் தீபச்சுடர்களை ஏற்றியும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர். [உ-5-15]

## தமிழ்த் தேசிய மீட்புப் படை தீவிரவாதக் குழுவின் ஸ்தாபகர் கோபாலசாமியின் சகோதரராம்!

சென்னை, ஆக. 30

தி. மு. கழகத் தலைவர்களில் ஒருவரான வை. கோபாலசாமியின் சகோதரர் ரவிச்சந்திரனே தமிழ்த் தேசிய மீட்புப் படையின் ஸ்தாபகர் ஆவார். விடுதலைப் புலிகளினால் யாழ்ப்பாணத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட 16 பேரில் ரவிச்சந்திரனும் ஒருவர்.

தமிழக சிறப்புப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பிரகாஷ் சந்திரா பந்த் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:- "பிரிவினை கோரும் ஆயுதக் கிளர்ச்சி இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கவிருந்த சமயம் நாம் இவர்களைக் கைது செய்தோம்.

தமிழக ஆயுதப் பொலீஸாரின் ஏழாவது பட்டாலியனின் பழனி முகாமைத் தாக்கிக் கைப்பற்ற இவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். பழனி முகாமின் வரைபடமும் இவர்களிடம் இருந்தது.

"மக்களைப் பயமுறுத்து முகமாகவும் அரச அதிகாரிகளை அச்சத்தில் ஆழ்த்து முகமாகவும் அரச மற்றும் பொலீஸ் [illegible] கொல்லவும் இ[illegible] மிட்டிருந்தனர்.

"தானியங்கி ஆயுதங்கள், வெடிப்பொருள்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் விதம் மற்றும் சதிச் செயல்களை செய்வது ஆகியன குறித்து பயிற்சி பெறுவதற்காக தமிழ்த் தேசிய மீட்புப் படையைச் சேர்ந்த 16 பேர் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்களில் 10 பேர் இந்தியா திரும்பி விட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து வெடிப்பொருள்கள், தொடர்பு சாதனக் கருவி, ஆயுதங்கள், பணம் மற்றும் [illegible] கைப்பற்றினர்.

[5 ஆம் பக்கம் பார்க்க]

ஊருக்கொரு குளம் செய்வோம்
பாருக்கே உணவளிப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் ஆயுதங்கள் பொலீஸார் கைப்பற்றினர்

திருகோணமலை, ஆக. 30 திருகோணமலையின் கடலோரப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த பெருமளவு துப்பாக்கிகள், கைக்குண்டுகள் பிஸ்டல்கள் என்பவற்றை பொலீஸார் கைப்பற்றினர்.

தகவல் ஒன்றினை அடுத்தே பொலீஸார் திருமலை 10 ஆம் குறிச்சி பகுதியின் கடற்கரைப் பிரதேசத்தில் இருந்து இந்த ஆயுதங்களை மீட்டெடுத்தனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவ் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (த)

## தீர்வை குறைப்பு

சிமெந்து இறக்குமதிக்கான சுங்கத் தீர்வை பதினைந்து சதவீதத்தில் இருந்து ஐந்து சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இத்தீர்வைக் குறைப்பு எதிர்வரும் நவம்பர் மாதம் வரை அமுலில் இருக்கும் என்று நிதி அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இடம் மாற்றம்

இராணுவ நடவடிக்கைகளை அடுத்து பண்டத்தரிப்புக் கல்விக்கோட்ட அலுவலகம் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்புக் கோட்ட அலுவலகத்துக்குரிய தளபாடங்கள் தவிர்ந்த ஏனைய தஸ்தாவேஜுக்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உள்ள அலுவலகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. (உ-90)

# ஊழல் குற்றவிசாரணை: சந்திக்க கருணாநிதி தயார்!

தம்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க தமிழக அரசு நியமித்துள்ள விசாரணைக் கமிஷனின் நடவடிக்கைகளைப் புறக்கணிக்கப்போவது இல்லை என்று முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

முதலமைச்சர் ஜெயலலிதா மீது தாம் சுமத்திய ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக தம் மீது முதலமைச்சர் அவதூறு வழக்கு தொடர்ந்தால் அதனைச் சந்திக்கத் தான் தயாராக இருப்பதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்தார். (த-எ)

# பத்மநாபா கொலை வழக்கு: இரகசியமாக விசாரணை?

சென்னை, ஆக. 30 ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா கொலை வழக்கின் விசாரணையை இரகசியமாக நடத்தவே பொலீஸார் விரும்புவதாக அறிய வருகிறது.

தடா சட்டத்தின் கீழ் தொடரப்பட்டுள்ள இவ் வழக்கின் விசாரணையை சென்னை அரசினர் தோட்டம் அருகே உள்ள "கூவம்" இல்லத்தில் நடத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகின்றது.

இதேவேளை — வழக்கின் விசாரணையை சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றக் கட்டடத்தில் நடத்த வேண்டாம் என்று சிறப்புப் புலனாய்வுப் பிரிவு கேட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (த-எ)

# 500 கால் நடைகளுக்கு மாதாந்தம் சிகிச்சை

உடுவில், ஆக. 30 யாழ்ப்பாணம் கால் நடை வைத்தியசாலை மாதாந்தம் 500 கால் நடைகளுக்கு வைத்திய சிகிச்சை அளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கால்நடை வைத்தியர் அலுவலகமாக இருந்த கால்நடை வைத்தியசாலையாக மாற்றப்பட்ட பின்னர் இவ் வைத்தியசாலையின் செயற்பாடுகள் துரிதமாக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் எம். தங்கராசா இத் தகவலைத் தெரிவித்தார்.

சனிக்கிழமைகள் தோறும் ஆயிரம் முதல் ஆயிரத்து இருநூறு கோழிகள் வரை நோய்த் தடுப்பூசி இங்கு போடப்படுவதாகவும்,

இவ்வருடம் கோழிநோய்க்கான தடுப்பூசி முதற்கட்டமாக 15 ஆயிரத்து 663 கோழிகளுக்கும், இரண்டாம் கட்டமாக 26 ஆயிரத்து 997 கோழிகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

மேலும் ஆயிரத்து 200க்கும் அதிகமான மாடுகளுக்கு இவ் வருடம் செயற்கை முறை சினைப்படுத்தல் செய்யப்பட்டுள்ளதுடன் கர்ப்பப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, வேண்டிய வைத்திய உதவிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் வைத்திய அதிகாரிகள் பிரிவினரின் அனுசரணையுடன் நாய்களுக்கான தடுப்பூசிகள் போடும் வேலையும் இங்கு இடம்பெற்று வருகின்றன. [த-152]


## நன்றி நவிலல்

சடந்த 23-08-92 இல் இறைவனடி சேர்ந்த எமது அன்புச் சகோதரி செல்வி பத்மாவதி ஐயாத்துரையின் நல்லடக்கத்திற்கு 24-08-92 இல் சமுகமளித்தும், ஒத்தாசை உதவிகள் புரிந்தும் பங்குபற்றிய சகல உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும், பொறுப்பேற்று நடத்திய இணுவில் மக்லியட் வைத்தியசாலை பிரதம நிர்வாக உத்தியோகத்தர் D. H சோமசுந்தரம் அவர்களுக்கும், மதிப்புக்குரிய கிறிஸ்த சேவ ஆச்சிரம அருட்தந்தை சாம் அண்ணன் அவர்களுக்கும், இணுவில் திருச்சபைத் தலைவர் அருள்திரு. மில்ரன் அவர்களுக்கும், இவ்வார் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் சேவையாற்றி உதவிக் கரம் கொடுத்த வைத்தியர்கள், தாதிமார், உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நிறை நன்றியை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி. இ. இராமச்சந்திரன்,
திருமதி ஞா. சின்னத்தம்பி,
திரு. ஐ. இராசதுரை.
(சகோதரர்கள்)

[22243]



## 35ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

அமரர்
தம்பிப்பிள்ளை சொக்கலிங்கம்

எமது குடும்பத் தலைவர் அமரர் திரு. தம்பிப்பிள்ளை சொக்கலிங்கம் (கோண்டாவில் வீதி, இருபாலை, கோப்பாய்.) அவர்கள் சிவபதம் அடைந்தமை குறித்து ஈமக்கிரியைகளிலும் (28-07-92) அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஏனைய சமயக் கிரியைகளிலும் நேரில் கலந்து கொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பிடவர்களுக்கும் பல்வேறு வழிகளில் மேற்படி கிரியைகளை நடத்த உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் ஈமக்கிரியைகளில் இரங்கலுரை நிகழ்த்திய பெரியோர்களுக்கும், கோப்பாய், மானிப்பாய், நல்லூர், சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கும், மக்கள் நலன் காக்கும் பிரிவு உறுப்பினர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

40/2, ரஜீகன் வீதி,
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு. [22352]



New Science Academy,
Jaffna.

93 A/L

★ PHYSICS
வெப்பவியல் [Heat]

திரு. கணேசன்
B. Sc. [Eng]

ஆரம்பம்:
30-08-1992
சனி — ஞாயிறு
7-00, 8-00

(சி-3179)



## ஏல விற்பனை

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்/பல்கலைக்கழக விவசாய பீடம் உற்பத்தி செய்த. செத்தல் மிளகாய் 09-09-92 அன்று காலை 10-00மணிக்கு கிளிநொச்சி விவசாய பீடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். வெற்றி பெறுபவர்கள் அதற்கான பணத்தைச் செலுத்தி அவற்றை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். பார்வையிட விரும்புபவர்கள் கிளிநொச்சி விவசாய பீடத்தில் பீடாதிபதியுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

— பதிவாளர்.
யாழ்/பல்கலைக்கழகம்.
[சி-3206]



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்பு விழா 1992

செப்டம்பர் 5ஆம் திகதி நடைபெறவிருக்கும் யாழ் பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றும் மாணவர்களுக்கான அங்கிகள் 02-09-1992 — 04-09-1992 வரை மு.ப. 9-30 மணி முதல் பி.ப. 3-00 மணி வரை கல்விக் கிளையில் வழங்கப்படும். நிழற்படத்திற்கான கட்டணமாக ரூபா 25/-ஐ சிறாப்பர் அலுவலகத்தில் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை மாணவர்கள் கொடுத்துத் தமது அங்கிகளைப் பெற்றுக் கொள்ளவும். அங்கியைப் பெற வரும் பொழுது மாணவ அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

பதிவாளர்
[சி-3204]



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

A/L 93 கலை, வர்த்தகம்
Day Classes 8-00—9-00
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 03-09-1992 [வியாழன்]

பொருளியல்: திரு. கலாகரன்
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 8-00 — 9-30
,, II வினா-விடை 9-30 — 11-00

கணக்கியல்: திரு. பிரபாகரன்
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 11-00 — 12-30
,, II வினா-விடை 12-30 — 2-00

வர்த்தகம்: திரு. இரகுநாதன்
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 12-30 — 2-00
,, II வினா-விடை 11-00 — 12-30

கணக்கியல்; திரு. A. பிரபாகரன்
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 9-30 — 11-00
,, II வினா-விடை 8-00 — 9-30

Evening Classes [செவ், வியாழன்]
இந்து நாகரிகம்: காரைசுந்தரம்பிள்ளை
வினா-விடை 3-00 — 4-00
தமிழ் திரு. குழந்தை
வினா-விடை 4-00 — 5-00

குறிப்பு: எமது மாணவர்களின் பெறுபேறுக்கு உத்தரவாதம்.

(சி-3185)



English Teacher's Selection
EXAMINATION - Sept. - 1992
★ துரித கற்கை நெறி
ஆரம்பம்: 31-08-1992
திங்கள் மு. ப. 10 மணி

ஆசிரியர்கள்:
K. சபாநாயகம்
T. N. பஞ்சாட்சரம்

New Science Academy,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
(சி-3164)



## முதலாவது பிறந்த தின வாழ்த்து



செல்வி
சிந்தியா விவேகானந்தன்

கொக்குவிலைச் சேர்ந்த விவேகானந்தன் - வசந்தி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி செல்வி சிந்தியா தனது முதலாவது பிறந்த தினத்தை கொழும்பில் இன்று மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இந்தியாவை கொழும்பில் உள்ள அவரது அப்பா, அம்மா, அப்பம்மா அம்மம்மாமார், தாத்தாமார், பூட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார் சித்திமார் மாமாமார், மாமி மற்றும் உற்றார், உறவினர்கள் நண்பர்கள், நயினை நாகபூஷணி அம்மனின் அருள்பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

திரு. திருமதி வே. சுப்பிரமணியம்
நந்தாவில் லேன்,
கொக்குவில்.
[5284]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... யாழ்ப்பாணம்

# அம்பாறை அகதி முகாம்களில் அவலமுறும் 25 ஆயிரம் தமிழர்

## உணவு, சுகாதாரம், குடிதண்ணீர் வசதிகளில்லை

யாழ்ப்பாணம், ஆக. 30

அம்பாறை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினாலும், வன்முறைச் சம்பவங்களாலும் 24 ஆயிரத்து 481 தமிழர்கள் இடம்பெயர்ந்து பொருளாதார வசதிகளற்ற நிலையில் அகதி முகாம்களிலும், வேறிடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மொத்தம் 25 முகாம்களில் இங்கு தமிழர்கள் தங்கியுள்ளனர். அந்த முகாம்களில் மலசலகூட வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், குழந்தைகளுக்கான போஷாக்கு உணவு வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் தமிழர்கள் வாழ்கின்றனர்.

பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாதுள்ளனர்.

1990ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஆயிரத்து 502 வீடுகள் முற்றாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. 950 வீடுகள் குறிப்பிடக் கூடிய அளவில் சேதமடைந்துள்ளன.

பெரும்பாலான தமிழர்களின் விவசாய நிலங்கள் பதிக்கப்பட்டு அவை சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன; விவசாய நடவடிக்கை மூலம் வருமானத்தையும் தொழில் வாய்ப்பையும் பெற்று வந்த தமிழர்கள் இதனால் அவற்றை இழந்துள்ளனர்.

முகாம்களுக்குள் மனநோய் பிடித்தவர்கள் போல் அவர்கள் முடங்கியுள்ளனர்.

இந்நிலையில் அவர்களுக்கான நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டிருப்பதால் அவர்களின் வாழ்க்கை நிலை மேலும் மோசமடைந்திருக்கிறது. (உ-5)

## கிளிநொச்சிக்கு அம்புலன்ஸ்

முறிகண்டி, ஆக. 30

கிளிநொச்சி மாவட்டத்திற்கென இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் அம்புலன்ஸ் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் இதனை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கியிருந்தது. (த-ரி)

## அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கை நாளை ஆரம்பம்

சென்னை, ஆக. 30

ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் நாளை மீண்டும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

சென்னை மேல் நீதிமன்றின் ஒரு வார கால இடைநிறுத்தக் கட்டளை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதாக தமிழ்நாடு அரசின் புனர்வாழ்வுச் செயலாளர் பாஸ்கரதாஸ் தெரிவித்தார்.

அகதிகளை அனுப்பும் நடவடிக்கைகளுக்கு இம் மாத இறுதி வரையுமே விமானங்கள் கிடைக்கும் என்றும் — அடுத்த மாதத்துக்கான விமான சேவை அட்டவணை பற்றிய முடிவை மத்திய அரசே எடுக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். (த)

## கிளிநொச்சியிலும் பரீட்சைகள் சுமுகமாக நடைபெற்றன

முறிகண்டி, ஆக. 30

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் ஆண்டு - 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை கிளிநொச்சி மாவட்டத்தில் சுமுகமாக நடைபெற்று முடிந்ததாக அறிவிக்கப்படுகிறது.

பரீட்சைகள் சுமுகமாக நடைபெற உதவிய சகல தரப்பினருக்கும் கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் நன்றி தெரிவித்துள்ளார். (த-ரி)

## நாகநாதன் நினைவு நாள் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 30

''இரும்பு மனிதன்'' நாகநாதன் நினைவு நாள் வைபவம் இன்று ஞாயிறு பிற்பகல் 3-00 மணிக்கு அரியாலை ஆனந்தா வித்தியாலயத்தில் நடைபெறும்.

திரு. ப. கணபதிப்பிள்ளை வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

பண்டிதர் நா. இராசையா, திரு. ந. அருணாசலம், திரு. செ. துரைசிங்கம், திரு. ச. அ. தர்மரத்தினம், வைத்திய கலாநிதி திருமதி தி. கோபாலரத்தினம் ஆகியோரும் — மற்றும் விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் வைபவத்தில் உரை நிகழ்த்த உள்ளனர்.

சங்கீத பூஷணம் ச. பாலசிங்கத்தின் தமிழிசைப்பாடல்களும் இடம்பெற உள்ளன.

தந்தை செல்வா நினைவுக் குழு இன்றைய வைபவத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (இ)

# அமைதிப்படை அதிகாரி டில்லியில் சுட்டுக் கொலை

## பின்னர் சீக்கியத் தீவிரவாதியாம்

புதுடில்லி, ஆக. 30

கடந்த 11ஆம் திகதி புதுடில்லி மேற்குப் பகுதியில் டில்லி பொலீஸ் கொமாண்டோக்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட மஞ்ஜித்சிங், இந்திய இராணுவத்தில் பணி புரிந்த போது இந்திய அமைதிப் படையில் ஒருவராக இலங்கையின் வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கடமை ஆற்றியவராம்.

'இந்து' ஆங்கில நாளிதழ் மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

பௌஜி என்றும் மறு பெயர் கொண்ட மஞ்ஜித்சிங் இலங்கையில் இருந்து இந்தியா திரும்பிய பின் இந்திய இராணுவத்தை விட்டு ஓடிச் சென்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் சீக்கியத் தீவிரவாதிகள் நடத்தவிருந்த பாரிய தாக்குதல் ஒன்றில் பங்குபற்றுவதற்காக மஞ்ஜித்சிங் புதுடில்லியில் சனசந்தடிமிக்க டி.டி.ஏ. கொலனியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்த போது அந்த வீட்டை பொலீஸ் கொமாண்டோக்கள் சுற்றி வளைத்தனர்.

அப்போது இடம்பெற்ற நான்கு மணித்தியால துப்பாக்கிச் சண்டையில் மஞ்ஜித்சிங்கும் அவரது சகாவான ஹர்ஜிந்தர்கௌர் என்பவரும் கொல்லப்பட்டனர்.

## விஸ்தரிப்பு

வவுனியாவில் உள்ள தாண்டிக்குளம் ரயில் நிலையத்தை விஸ்தரிப்பதற்காக 12 லட்சத்து 43 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உ
கொக்குவில் கிழக்கு
பொற்பதி விநாயகர் ஆலயம்
அலங்கார உற்சவம் :
31 — 08 — 1992 முதல் 09 — 09 — 1992 வரை
திருமுறைத் தொடர் சொற்பொழிவு
தினமும் மாலை 5 - 45 மணிமுதல் 6 - 45 மணிவரை
நிகழ்த்துபவர்:
பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர், ''சிவத்தமிழ் வித்தகர்'', திருமுறைச் சொல்வள்ளல்''.
திரு. சிவமகாலிங்கம் அவர்கள்
(B. A. Dip - in - Ed)
(22344)

ஈச்சமோட்டை கலட்டிப்புலம்
ஞானவைரவ தேவஸ்தான
விநாயகர் சதுர்த்தி விஞ்ஞாபனம்
31 - 08 - 1992 திங்கள் காலை 11-00 மணிக்கு அபிஷேகம் நடைபெறும்.
மாலை நிகழ்ச்சிகள்
சிறப்புச் சொற்பொழிவு:
6-00 மணிக்கு தமிழருவி த. சிவகுமாரன்
8-00 மணிக்கு கம்பவாருதி இ. ஜெயராஜ்
- விழா உபயகாரர்.
(22347)

NEW SCIENCE ACADEMY
JAFFNA.
A/L 93
DAY CLASSES
(ஒரு வருட வகுப்பு)
PHYSICS — கணேசன்
CHEMISTRY — சண்
BOTANY — குணசீலன்
ZOOLOGY — பிரபல ஆசிரியர்
PURE/APP. MATHS — வெக்டர்
ஆரம்பம்: 01 - 09 - 1992
செவ்வாய் காலை 8-00 மணி
(இ-3166)

உ
சிவமயம்
★ திருமண அழைப்பு ★
அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருடம் ஆவணித் திங்கள் 21ஆம் நாள் 06-09-1992 ஞாயிற்றுக்கிழமை காலை 11-30 மணி தொடக்கம் 1-00மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,
இராசா சதானந்தன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன்
மனோராஜ்
அவர்களுக்கும்
('சுகஸ்தான்' சங்குவேலி, மானிப்பாய்)
திருமதி ம. சிவஞானம் காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் திருநிறை செல்வி
தங்கேஸ்வரி
அவர்களுக்கும்
(ஏழாலை மேற்கு, சுன்னாகம்)
லண்டன் றைவ்பீல்ட் பிறைமறி ஸ்கூல் மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து, மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்:
திரு. திருமதி பாலேந்திரன்,
No. 46, Selkirk Road,
Tooting,
London, SW 17 OES,
081-767-2773.
திரு. திருமதி தர்மபாலன்,
திரு. திருமதி இராமச்சந்திரன்,
No. 23, Midhurst Gardens,
Hillingdon,
Middlesex UB 10 9DL,
0895 - 234415
(22340)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
93 A/L கலை, வர்த்தகம்
வினா-விடை வகுப்புக்கள்
புதிய பிரிவு ஆரம்பம்: 05-09-1992
காலை 8 மணி
பொருளியல் — திரு. கனாகரன்
வர்த்தகம் — திரு. தேவா
கணக்கியல் — திரு. வன்னியசிங்கம்
அளவையியல் — திரு. சுப்பிரமணியம்
இந்துநாகரிகம், இந்து சமயம் — திரு. காரை சுந்தரம்பிள்ளை
தமிழ் — திரு. குழந்தை
புவியியல் — திரு. குணராசா
அரசியல் — திரு. ஜெயகாந்தன்
வரலாறு — திரு. சிறீதரன்
குறிப்பு:
★ எமது மாணவர்களின் பெறுபேறுக்கு எமது உத்தரவாதம்.
★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
(இ-3182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மேசைகள், வாங்குகள், சந்தோர் வாங்குகள், இலாச்சி மேசைகள், வீட்டுச் சோக்கேஸ், கடைச் சோக்கேஸ், அலுமாரிகள், ஜன்னல், கதவுகள், இரும்புக் கதவுகள் (கேற்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (22332)

## மணமகள் தேவை

டென்மார்க்கில் பணிபுரியும் மணமகன் வயது 36, புனர்பூசம், கிரகபாவம் 60, திருமணம் கொழும்பில் அல்லது சிங்கப்பூரில். அழகும் நற்குணமும் உள்ள மணமகள் தேவை. இல. 435, மே/பா உதயன். [22328]

சொந்த வியாபாரம், வயது 38, பூராடம் நட்சத்திரம் மணமகனுக்கு அழகும், நற்குணமும் உள்ள மணமகள் தேவை. இல. 434, மே/பா உதயன். [22327]

## புலமைப்பரிசில் பரீட்சை

23 - 08 - 1992 அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆண்டு-5 [புலமைப் பரிசில்] பரீட்சை வினாத்தாள்கள் - விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-3162]

## புவியியல் A/L

படவேலை [1:50 000] நில வுருவங்கள், கால நிலையியல், தேசப் படத் தொகுதி [அற்லஸ்] ஆகிய பாட நூல்களின் புதிய பதிப்புகள் வெளி வந்துள்ளன. ஆக்கம்: க. குணராஜா (எம்.ஏ). எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [22309]

## வியாழ (குரு) மாற்றம்

செப்டம்பரில் செவ்வாய், வியாழன் மாற்றங்களின் பலாபலன்கள் உங்களுக்கு எப்படி? பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபாவைப் போல் அவதார புருஷர், பகவான் ஸ்ரீ நீலகண்ட பாபாவின் அற்புதங்களும் ரூபா 8.50/-. எங்கும் விற்பனையாகின்றன, பூபாலசிங்கம், மக்மிலன் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். [Prof. சத்தியநாதன்] [4953]

## கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவம் உடைய ஆசிரியரினால் இரண்டு மாதங்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (22348)

## துர்க்கா திருமண சேவை

31-8 92 தொடக்கம் துர்க்கா திருமண சேவை. சிவசக்தி ஸ்ரோர்ஸ் இல. 194, நாவலர் றோட், யாழ்ப்பாணம். சகலரும் மேற்கூறிய முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். [4954]

## கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள்! சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ், இல. 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [22345]

## ENGLISH COURSE

English Grammar and Spoken English for all Examinations, ஒருங்கமைந்த ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கிழமையில் இரண்டு நாட்கள். V. N. Kandasamy, A. I. B. (Part I) - (London) Inter (London). இல 87, திருநெல்வேலி றோட் (மாலதிற்கு அண்மையில்) கொக்குவில். (22335)

## காணவில்லை

ஒரு வயதுடைய ஆண் பொமனேரியன் மஞ்சள் கலந்த வெள்ளை நிற நாயை 19 - 08 - 1992 முதல் காணவில்லை. கண்டுபிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். அபிராமி கிளினிக், களாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (22330)

08-08-92 இல் இருந்து பொமனேரியன் பெண் நாய் "யப்பானிஸ் ஸ்பிற்" (வெள்ளை நிறம்) காணாமல் போய்விட்டது. தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். க. தருமலிங்கம், 1 ஆம் கட்டை, மானிப்பாய் றோட், உடுவில். [5286]

## C. C. A.

யாழ்ப்பாணம்.

**கலந்துரையாடல்**

**A/L 92**

பரீட்சை எடுத்த மாணவர்கள் அனைவரும் இன்று **30 — 08 — 1992** மாலை 4 மணிக்கு சந்திக்கவும்.

\- நிர்வாகி.

[சி-3173]

## O/L கணிதம்

Distinction பெறுபேறடைய துரிதமாக எல்லா அலகுகளும் B Sc. [Cey] ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. [22346]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1992 - 09 - 25 ஆம் திகதிவரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**தற்காலிக போதனாசிரியர் [கணணிப்பகுதி]**

**சம்பள அளவுத்திட்டம்:-**

தற்காலிக போதனாசிரியர் (கணணிப்பகுதி) - ரூபா 3,250/- (நிலையானது) மாதமொன்றிற்கு (பரீட்சை பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை 3,000/- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப் படுவர்.)

**தகைமைகள்:**

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்விற்கு தோற்றி பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்.

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23 x 10ச. மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

\- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-08-27. [கி-3100]

## பதவி வெற்றிடம்

1. **TYPIST CUM CLERK**
   A/L விஞ்ஞானம் படித்த, ஓரளவு Typing தெரிந்தவர்கள்
2. **TYPING, SHORT-HAND - INSTRUCTORS**
   Typing, Short - Hand கற்பிப்பதற்கு அனுபவமும், ஆர்வமும் உள்ளவர்கள் தமது நற்சான்றிதழ்களுடன் காலை 8-00 முதல் 4-00 வரை 05-09-92 இற்கு முன் நேரில் வரவும்.

**BOND INSTITUTES,**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[கி-3201]

## தென்னிந்திய திருச்சபை

யாழ். அத்தியட்சாதீனம்
பண்டத்தரிப்பு.

## சிறு கைத்தொழில் நிலையம்

மேற்குறிப்பிட்ட பெண்கள் கைத்தொழில் நிலையம் வட்டுக்கோட்டை ஆதீன காரியாலய வளாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. பயிலுனர் திங்கட்கிழமை காலை (31 - 08 92) வருகை தரவும்;

புதிய பயிலுனர்க்கான பத்திரங்களும் வழங்கப்படும். பதிவு செய்ய விரும்புவோர் பத்திரங்களை காரியாலயத்தில் பெறவும்.

முகாமையாளர் / ஆசிரியர்.

(சி/3205)

## பற்றீஷன்

### தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
### PATRICIAN INSTITUTES

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள்
புதிய பிரிவுகள்

**03 - 09 - 1992 அன்று ஆரம்பமாகின்றன**

1. Computer Processing Courses
   (i) BASIC (ii) WORD PROCESSING
   (iii) d BASE III PLUS
   (iv) LOTUS 1-2-3
2. Draughtsmanship Course
   Civil & Mechanical
3. Quantity Surveying Course
   Civil & Electrical
4. (i) Special English Classes
   (ii) Toefl
5. City and Guilds of London Examination (year 93)
   (i) Electrical Electronic Engineering
   (ii) Quantity Surveying
6. Short - Hand and Typing (English)
7. Motor Mechanism
   மோட்டார் வாகனம் திருத்துதல்
8. Motor Winding
   மோட்டர் வைண்டிங்
9. Electrical Wiring
   மின்சார இணைப்பு
10. General Electrician
    ஜெனரல் எலக்ரீஷியன்

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:

Registrar,
Patrician Institutes,
No. 59, St. Patrick's Road,
Jaffna.

பதிவாளர்,
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்,
இல. 59, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3176)

A/L பரீட்சை எழுதிய மாணவர்களதும் ஏனையோரதும் வேண்டுகோளுக்கிணங்க

## எழுதுவினைஞர் போட்டி

பரீட்சைக்கான

## ★ விசேட பயிற்சி வகுப்புகள் ★

3ஆவது பிரிவு: ஆரம்பம்: **01-09-1992** பிற்பகல் 2மணி

பாடநெறி! மொழித்தேர்ச்சி, பொதுவிவேகம்.

★ செவ்வாய், புதன், வியாழன் — பிற்பகல் 2 — 5மணிவரை
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ முழுப் பயிற்சிக்கும் — கட்டணம் ரூபா 300/- மட்டுமே:

**ASTAN INSTITUTE**
101/10, STANLEY ROAD, JAFFNA.
(சி-3169) [மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சந்தேகமின்றி ஊர்ஜிதம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை தமிழர்களின் 17, 614 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. 24 815 வீடுகள் பகுதி பகுதியாகச் சேதமாக்கப்பட்டுள்ளன. இந்தச் சேத மதிப்பீடு யுத்தம் நடைபெற்று வரும் கடந்த இரண்டே கால் வருடங்களுக்கும் உரியதாகும். அதாவது படையினரின் இராணுவ நடவடிக்கைகளின் போதும், அதற்குப் பிந்திய நிலைகொள்ளும் ஏற்பாடுகளின் போதும் அழித்து நாசமாக்கப்பட்டவையாகும்.

1990 ஜூன் 11 ஆம் திகதி மட்டக்களப்பிலேயே யுத்தம் ஆரம்பமாகியது. ஆனால் மட்டக்களப்பு மாவட்டம் தமது கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதாக, யுத்தம் தொடங்கிய ஒரு சில மாதங்களிலேயே அரசபடையினர் கூறத் தொடங்கிவிட்டனர். குண்டு வீச்சு, ஷெல் வீச்சு ஆகியவற்றுடன் போர் தீவிரமாக நடக்கும்போதே வீடுகள், கட்டடங்களுக்கு அதிக சேதம் ஏற்படுவதுண்டு.

எனவே ஆகக் கூடியது ஆறு மாதங்களில் இத்தனை ஆயிரக் கணக்கான வீடுகள் அழிந்தும் சேதமுற்றும் போனதாகக் கொள்ளலாமா? எவ்வாறெனினும் இத்தொகையில் அரைவாசிக்கும் — 20, 000க்கும் — மேற்பட்ட வீடுகள் யுத்தம் முழு அளவில் நடந்த ஆறு மாதங்களில் பாதிப்படைந்ததாக மதிப்பிட முடியும். அதாவது மட்டக்களப்பில் மாதாந்தம் சுமார் 3,500 வீடுகளைப் படையினர் அப்போது சேதமாக்கி உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் முற்றுமுழுதாகப் படைகளின் கட்டுப்பாட்டில் இல்லை. நகரப் பகுதிகள் மட்டுமே அவர்கள் பிடியில் உள்ளன. கிராமப் புறங்கள் எல்லாம் புலிகளின் பிராந்தியங்களாகவே விளங்குகின்றன. ஏன், படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள நகரப் பகுதிகள் கூட, பகலில் படைகள் ஆதிக்கம் செலுத்த இரவில் விடுதலைப் புலிகள் தமது அலுவல்களைத் தாராளமாகச் செய்கிறார்கள். இதனை அங்கு சென்று நேரில் பார்த்த வெளிநாட்டுச் செய்தியாளர்கள் பலரும் எழுதியுள்ளனர். அதனை ஒப்புக் கொள்வது போல, ஏற்றுக் கொள்வது போல மட்டக்களப்பு உட்பட கிழக்கைப் பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவர அங்கு பெருந்தாக்குதல்கள் நடத்தப்படும் என்று இராணுவ அதிகாரிகள் இரண்டொரு மாதங்களுக்கு முன்னரும் கூறி வந்தனர்.

ஆனால் கிழக்கில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் உண்டான பேரிழப்பின் பின்னர் கிழக்கை மறந்து வடக்கின் மீது தமது கவனத்தைக் கூடுதலாகச் செலுத்தி வருகின்றனர்.

அது நிற்க. தீவிர யுத்தம் நடந்த காலத்தில் அழிக்கப்பட்ட அதே அளவு வீடுகள் மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட காலத்திலும் (20 மாதங்களில்) அழிக்கப்பட்டுள்ளன. மாதாந்தம் சுமார் 21,000 வீடுகள் நாசமாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால்தெற்கில் மாதாந்தம் சராசரி 500 புதிய வீடுகள் கொண்ட கிராம எழுச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

வடக்கு - கிழக்கை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று அரசாங்கம் அவசரப்படுவது இது போன்ற சீரழிவுகளைச் செய்வதற்காகத்தான். தமிழ் மக்களின் நன்மை கருதி அல்ல என்பதை இது சந்தேகத்துக்கு இடமின்றி ஊர்ஜிதம் செய்கிறது.

## மகாநாயக்கர்களுடன் முஸ்லிம் காங்கிரஸ் பேச்சு நடத்தும்

கொழும்பு, ஆக. 30

இனப்பிரச்சினைக்கான தமது சமாதான யோசனைகள் அடங்கிய திட்டம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் அடுத்த வாரம் கண்டியில் அஸ்கிரிய மற்றும் மல்வத்தை மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துப்பேசுவர் 'ஐலண்ட்' பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டது.

## சாரணர் ஜம்போறியில் வடக்கிலிருந்து 62 பேர்

யாழ்ப்பாணம், ஆக. 30

யாழ். மாவட்ட சாரணர் சங்கம், காங்கேசன்துறை சாரணர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த 62 சாரணர்கள் கடந்த வாரம் குருநாகலையில் நடைபெற்ற 4 ஆவது தேசிய சாரணர் ஜம்போறியில் பங்குபற்றினர்.

ஜம்போறியில் இருமாவட்ட சாரணர்களும் தாம் பங்குபற்றிய சகல போட்டிகளிலும் வெற்றி பெற்றனர். சாரணர் வினைத்திறன் சிறப்புப் போட்டியிலும் சகல சாரணர்களும் வெற்றி பெற்று சாதனை புரிந்தனர்.

10 ஆயிரத்துக்கு மேற்பட்ட இலங்கையர் உட்பட வெளிநாடுகளைச் சேர்ந்த சாரணர்கள் பங்குபற்றிய இந்த ஜம்போறியில் யாழ். சாரணர்கள் பெரிதும் முக்கியத்துவம் உடையவர்களாகக் கணிக்கப்பட்டனர் என்று யாழ். மாவட்ட சாரணர் குழுவுக்கு தலைமை வகித்துச் சென்ற சாரணர் உதவி மாவட்ட ஆணையாளர் திரு. இ. ராஜ்குமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட மக்களின் துன்பகரமான நிலைமைகள், இராணுவ நடவடிக்கைகள் அதனால் ஏற்படும் உயிர் இழப்புக்கள் ஆகியவை குறித்து விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டு கருத்துப் பரிமாற்றமும் செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை சாரணர் மாவட்டக் குழுவுக்கு திரு. என். போஜன் தலைமை வகித்துச் சென்றார். [உ-30]

## 3 தமிழர் கைது!

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று தமிழர்களை அவிசாவளைப் பொலிசார் கைது செய்துள்ளதாக இலங்கை வானொலி அறிவித்தது.

இம்மூவரும் ஹட்டன் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

## இன்று

உடுவில், ஆக. 30

சங்குவேலி ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டு விழா இன்று நடைபெறும். அதையொட்டி விளையாட்டுப் போட்டியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் இலவச பதிவுத் திருமணங்களும் செய்து வைக்கப்படும் (த-152)

★ ★ ★

குருநகர், ஆக. 30

யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்ற வேட்போர் கூடத்தில் இன்று (ஞாயிறு) மாலை 5மணிக்கு இலக்கிய அவைகூடும்.

''பாரதி கண்ட பாஞ்சாலி'' என்னும் பொருளில் கலாநிதி காரை செ. சுந்தரம் பிள்ளை கருத்துரை வழங்குவார். (ஓ-51)

★ ★ ★

கொழும்புத்துறை, ஆக. 30

கொழும்புத்துறை மணிப்புரி ஸ்ரீ முருகன் ஆலயச் சுற்றாடல் பகுதி இன்று ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

ஆலய பரிபாலன சபையினரும், இந்து இளைஞர் மன்றத்தினரும் இணைந்து சிரமதான பணியைச் செய்யவுள்ளனர். (ஓ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 30

பூரண யோக சமாஜத்தின் ஆண்டு விழா இன்று ஞாயிறு மாலை 3-30 மணியளவில் யாழ். வைமன் வீதியிலுள்ள ''அருளகம்''தில் நடைபெறவுள்ளது. விழாவில் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஓ)

★ ★ ★

சித்தன்கேணி, ஆக. 80

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்விப் பயிற்சி நெறி பயிலுநர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று காலை 8-30 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி பயிற்சி நெறியின் சிரேஷ்ட போதனாசிரியை திருமதி சி. திருநாவுக்கரசு தலைமையில் இக்கலந்துரையாடல் நிகழும். (அ-142)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 30

கிராம அபிவிருத்தியில் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தும் நோக்கோடு ''கிராமிய அபிவிருத்திக்கான உபாயம்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது தொடர்ந்து இன்றும் நடைபெறும்.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் சாவகச்சேரிப் பகுதி சனசமூக நிலைய அ[illegible] பெரும்பாலும் பெண்கள் உட்பட — சுமார் [illegible] பற்றிவருகின்றனர். (உ)

## யாருடையது?

யாழ்ப்பாணம். ஆக. 30

மானிப்பாய்ப் பகுதியில் தாம் கண்டெடுத்த குறிப்பிடத்தக்க தொகையுள்ள பணத்தை சுழிபுரத்தைச் சேர்ந்த சே. சிவகுமார் என்பவர் உதயன்பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்,

சுதுமலையைச் சேர்ந்த கே. செல்வக்குமரன் என்பவர் தாம் சுன்னாகம் பகுதியில் கண்டெடுத்த பெண்கள் கைக்கடிகாரம் ஒன்றை சுன்னாகத்தில் உள்ள உதயன் சேவை நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் உதயன் சேவை நிலையத்தில் [82, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்] பெற்றுக்கொள்ளலாம். (அ)

## சந்நிதியில் செயலகம்

வடமராட்சி, ஆக. 30

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் உற்சவ காலத்தையொட்டி குட்டிச் செயலகம் ஆரம்பித்துச் செயற்பட்டு வருகிறது.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகேசம்பிள்ளை தலைமையில் இந்தக் குட்டிச் செயலகம் இயங்கி வருகிறது.

ஆலயத்திற்கு வரும் பக்தர்களது முறைப்பாடுகளை பதிவு செய்யக்கூடிய வகையிலும் உடன் நடவடிக்கை எடுக்கும் வகையிலும் இந்தக் குட்டிச் செயலகம் செயற்படும். (அ-165)

## உற்சவங்கள்

யாழ்ப்பாணம். ஆக. 30

கந்தரோடை வற்றாக்கை விசாலாட்சி அம்மன் கோவில், தெல்லிப்பழை மத்தி கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் கோவில், கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி கோவில் ஆகியவற்றின் வருடாந்த சங்காபிஷேகம் இன்று காலை நடைபெறும்.

★ ★ ★

தென்மராட்சி. ஆக. 30

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய எட்டாம் திருவிழாவான இன்று இரவு ''கானகதாவாரிதி'' பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா ''காவிரி தந்த கணபதி'' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப் பிரசங்கம் நடத்துவார். (உ-117)

★ ★ ★

கச்சாய் தெற்கு சித்தி விநாயகர் ஆலயம், சாவகச்சேரி செருக்கல்பதி சித்தி விநாயகர் ஆலய பஞ்ச முக விநாயகர் ஆகியவற்றின் மகா கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறும்.

★ ★ ★

கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கள் ஆரம்பமாகி நடைபெறும்.

(த-152, 30, 31, 117, 69)

## அலம்பிலில் ஸ்ரீலங்காப் படை கப்டனும் பலி

யாழ்ப்பாணம், ஆக. 30

மணலாறு மாவட்டம் அலம்பிலில் கடந்த 24 ஆம் திகதி ஸ்ரீ லங்காப் படையினரின் காவலரண்கள் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 7 இராணுவத்தினரில் ஒருவர் கப்டன் தரத்தில் உள்ள அதிகாரி எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தாக்[illegible] இலக்கானவர்கள் [illegible] பிரகேடியர் [illegible] விக்கப்பட்டது. (ஓ-3)

## பெருமாள் இப்போதைக்கு வரமாட்டார்

சென்னை, ஆக. 30

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதல மைச்சரும், ஈ. பி. ஆர். எல். எப். தலைவருமான திரு. வரதராஜபெருமாள் உடனடியாக இலங்கை திரும்பமாட்டார் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

## ஆங்கில ஆசிரியர் எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஆக. 30

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் ஆறாம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். என ஆங்கிலப் பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை வார இறுதியில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஓ-5)

## பற்றையை வெட்டியபோது அது வெடித்தது

யாழ்ப்பாணம், ஆக. 30

விறகுக்காக பற்றை ஒன்றை வெட்டிய பெண், பற்றைக்குள் இருந்த வெடிப்பொருள் ஒன்று வெடித்ததில் காயமடைந்தார்.

புன்னாலைக்கட்டுவன் மத்தாளஓடைப் பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றது. அவ்விடத்தைச் சேர்ந்த ஞானச்செல்வன் செல்வராணி (வயது 34) என்பவரே இச்சம்பவத்தில் காயமுற்றார்: அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விறகு வெட்டியகத்தி, பற்றைக்குள் இருந்த — சுடுநீர்ப் போத்தல் மூடி போன்ற ஒரு பொருளில் — பட்ட போது அது வெடித்ததாகக் கூறப்படுகிறது. (உ-15)

## விபத்தில் சிக்கியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 30

சாவகச்சேரியில் கடந்த 24ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார்சைக்கிள்-சைக்கிள் விபத்தில் தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்த ஒருவர் நேற்று ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சாவகச்சேரி கற்குழியைச் சேர்ந்த வி. கந்தசாமி (வயது 70) என்ற வயோதிபரே மரணமானவராவார். (உ-15)

## 'கெல்ற்' ஆங்கில வகுப்பு செவ்வாய் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 30

1990 - 91 கல்வியாண்டில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான 'கெல்ற்' [GELT] ஆங்கில வகுப்பு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகிறது.

1990 - 91 கல்வியாண்டில் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கு தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடிதங்கள் கிடைக்கப்பெற்ற சகல மாணவர்களும் —

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடிதம் கிடைக்கப் பெறாதவர்களில், புதிய வெட்டுப்புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படக்கூடிய அனைத்து மாணவர்களும் இன்று காலை 9மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் சமுகமளித்து தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-5)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம். ஆக. 30

கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:

★ சென் அன்ரனீஸ் வி. க. எதிர் பொற்பதி வி. க.

★ எவறெஸ்ற் வி. க. எதிர் சென் தோமஸ் வி. க. (உ)

## துர்க்கை அம்மன் உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 30

தெல்லிப்பழை அருள் மிகு துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுக் காலை 11 மணிக்கு கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகியது.

மக்கள் ஒழுங்குகளையும், வீதி ஒழுங்குகளையும் சென் ஜோன்ஸ் முதலுதவிப் படையினரும், சாரணரும் மேற்கொண்டிருந்தனர். (உ-15)

## ஆஸ்பத்திரியில் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 30

இடது பக்க விலாவில் குத்துக் காயத்துடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றிரவு 7 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

மானிப்பாயைச் சேர்ந்த பாக்கியதுரை உதயகுமார் (வயது 22) என்ற இளைஞரின் சடலமே ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

## காடையர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

வான் ஒன்றில் திடீரென வந்திறங்கிய— ஆயுதம் தாங்கிய— காடையர் குழு ஒன்றே இத்தாக்குதலை நடத்தியது.

இக்குழுவினரில் ஒருவர் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும்—

மற்றொருவர் பலத்த தடியினால் லவித்தைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

லவித்தின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரும் தாக்கப்பட்டார்.

இத்தாக்குதலில் லவித்தின் காலில் காயம் ஏற்பட்டது. காயம் பெரிதாக இல்லாவிடினும் அவர் சிறிது காலம் ஓய்வு எடுப்பது நல்லது என அவருக்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. (உ-10)

## தீவிரவாதக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''இந்தியாவில் இருந்து தமிழ்நாட்டைப் பிரித்தெடுக்கும் சதித் திட்டம் யாழ்ப்பாணத்துக்கு அருகில் உள்ள பலாலி, தமிழ்நாடு — கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள உடுமலைப் பேட்டை, கனியூர், வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள வாணியம்பாடி, அண்ணா மாவட்டத்தில் உள்ள பழனி, திண்டுக்கல் மற்றும் தமிழகத்தின் தெற்கு பகுதியில் உள்ள புதுக்கோட்டை ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டது.

காவலில் தற்போது உள்ள 20 சந்தேகநபர்களில் காமராஜர் மாவட்டம் — அருப்புக்கோட்டையைச் சேர்ந்த 23 வயதானவரும் ரவிச்சந்திரன், ஸ்ரீகாந்த் என்ற பெயர்களில் அழைக்கப்படுபவருமான ரவி என்பவர் தான் மிகவும் முக்கியமானவர் ஆவார்.

தமிழ்த் தேசிய மீட்புப் படையின் ஸ்தாபகர் இவர் தான்.

விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் கிட்டு மற்றும் விடுதலைப் புலிகள் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் ஆகியவர்களின் நெருங்கிய சகாவான இவர், யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளினால் பயிற்சியளிக்கப்பட்ட 16 பேர்களில் ஒருவர் ஆவார்.''

இவ்வாறு தமிழக சிறப்புப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பந்த தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உதவியுடன் இந்தியாவில் இருந்து தமிழ்நாட்டைப் பிரித்து எடுக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட தமிழ்த் தேசிய மீட்புப் படையுடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறப்படும் 32 பேர் மீது தமிழ்நாடு சிறப்பு புலனாய்வுப் பிரிவினர் விசேட நீதிவான் சௌந்தரபாண்டியன் முன்னிலையில் அண்மையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது தெரிந்ததே.

இவர்களில், விடுதலைப் புலிகள் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் உட்பட நான்கு பேர் இலங்கையர் ஆவர்.

35 சந்தேக நபர்களில் பதின்மூன்று பேர் தலைமறைவாக உள்ளனர். தலிகுமார் என்ற சந்தேக நபர் பொலிஸ் பாதுகாப்பில் இருந்து தப்பி விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் நேசரத்தினம்

கரைநகர், களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சாவகச்சேரி கச்சாய் வீதியில் வசித்தவருமாகிய திருமதி சுப்பிரமணியம் நேசரத்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் சுப்பிரமணியத்தின் (விக்கினேஸ்வரா - ஸ்ரோஸ் ஆலி—எல) அன்பு மனைவியும், செல்வரட்ணம், பரராசசிங்கம், இராசகுமாரன், (சாவகச்சேரி ஸ்ரீ விக்கினேஸ்வரா களஞ்சியம்), சுந்தரலிங்கம் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), கோமதி, ரவீந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற விநாசித்தம்பி கந்தையா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), விநாசித்தம்பி வைத்திலிங்கம் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்), ஆறுமுகம் சரஸ்வதி, விநாசித்தம்பி தியாகராசா, இராசையா பூமணி, நடராசா வாலாம்பிகை இராசையா சவுந்தராம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பவதி, தயாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜரூபாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (30-08-92) ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10-00 மணிக்கு கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
சுப்பிரமணியம் செல்வரட்ணம்
(மகன்)

ஸ்ரீ விக்கினேஸ்வரா களஞ்சியம்,
சாவகச்சேரி
(22356)

### மாரிமுத்து அம்பலவாணர்

(முன்னாள் முகாமையாளர் யாழ் நீறன் ஸ்ரோர்ஸ் இல. 82, 1ம் குறுக்குத்தெரு, கொழும்பு உரிமையாளர், மா. அம்பலவாணர் அடைவுகடை 82, கண்டி றோட், கிளிநொச்சி)

காரைநகர், ஆலடியைச் சேர்ந்த மாரிமுத்து அம்பலவாணர் 29 - 08 - 1992 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் காரைநகர் பலகாடு காலஞ்சென்ற மாரிமுத்து அன்னமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், இந்திராணியின் அன்புக் கணவரும், சிவசக்தி (பிரான்ஸ்), சிவரூபி (நுவரெலியா), குணசீலன் (லண்டன்), சத்தியசீலன் (யா/இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிர்மலானந்தனின் (பிரான்ஸ்) மாமனாரும், அரவிந்தன் (பிரான்ஸ்), ஆரணி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காரைநகர் கின்னாலடியைச் சேர்ந்த வி. எஸ். கணபதிப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இல. 116, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அன்னாரின் மைத்துனர் திரு க. சுந்தரலிங்கம் (ஆசிரியர், யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) அவர்களின் இல்லத்தில் (30 - 08 - 1992) இன்று காலை 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. சத்தியசீலன்
(மகன்)
(ஆலடி, காரைநகர்)

இல. 116, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.
(22354)

### தம்பு கந்தசாமி

மட்டுவில் அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கற்குளி சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான தம்பு கந்தசாமி அவர்கள் 29 - 08 - 92 இல் காலமாகிவிட்டார்.

இவர் முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், கமலாம்பிகை, திருநாவுக்கரசு (பிராந்திய நிர்வாக அலுவலகம், தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்), தம்பு (இளைப்பாறிய அஞ்சல் அதிபர்), சிவராசா (அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்) இராசதுரை ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (30 - 08 - 92) பி.ப 1 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

கற்குளி
சாவகச்சேரி.
(22355)

### கந்தையா முருகேசு

இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற அப்பர் பலாங்கொடை உரிமையாளர் கந்தையா சிவபாக்கியம் தம்பதிகளின் மகன் முருகேசு 29-8-1992 சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் அம்பிகையின் கணவரும், புனிதவதி, தாரகேசன் (டிரில்லரை எஸ்டேட், பிக்கோயா), காலஞ்சென்ற திலகவதி, ஜெயவதி, மகேசன் (நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), சபேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வ. செல்வத்துரை (இளைப்பாறிய ஆசிரியர், அத்தியார் இந்துக் கல்லூரி), க. ஆனந்த முருகா (ஹொங்கொங் சங்காய் வங்கி, கொழும்பு), க. குகப்பிரசாதம் (மின்சார சபை, யாழ்ப்பாணம்), தனபாக்கியம், சுசிலாதேவி சுமதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரமேஸ் (கனடா), மேகலா, அரவிந்தன் (ஹற்றன் நஷனல் வங்கி, வெலிமடை) பிரதாகரன் (கனடா), றோசன், சஜன், அபர்ணா, திவாகர், பவன், கௌதமி ஜெயன் ஹரிசன், வாகினி ஆகியோரின் பேரனும், யோனார்த்தனின் (கனடா) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-8-1992 (இன்று) பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வ. செல்வத்துரை
(மருமகன்)

V. H. லேன்,
இருபாலை,
கோப்பாய்.
([illegible])

# ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்

சென்னை, ஆக. 30

தமிழகத்திலிருந்து ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் மீண்டும் நாளை முதல் ஆரம்பமாகும் என அறிவிக்கப்படுகிறது.

ஈழ அகதிகளை திருப்பி அனுப்புவதை ஆட்சேபித்து திரு. பி. நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்திருந்தும் —

அதனை அடுத்து அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தும் —

பின்னர் அந்தத் தடையை நீதிமன்றம் ரத்துச் செய்ததுடன், நெடுமாறன், டாக்டர் ராமதாஸ் ஆகியோரின் மனுவை நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியிருந்ததும் தெரிந்தவையே.

இடை நிறுத்தப்பட்டிருந்த அகதிகளைத் திருப்பி அனுப்பும் வேலை, இத்தீர்ப்பை அடுத்து நாளை முதல் மீண்டும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஆயுதப்போரே இனவிடிவுக்கு ஒரே வழி: அன்றே உணர்த்தியவர் "கோவை"

### நினைவு தின நிகழ்ச்சியில் பேச்சு

ஆயுதப் போராட்டமே எமது இனத்தின் விடிவுக்கு வழிவகுக்கும் என உணர்ந்து அந்த வழியில் மக்கள் தமது சுவடுகளைப் பதிக்க தன் பேனாவைப் பயன்படுத்தியவர் கோவை மகேசன்.

தந்தை செல்வா நினைவுக் குழுவினால் அண்மையில் நடத்தப்பட்ட கோவை மகேசன் நினைவுதின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் திரு. பொன் பூலோகசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. ப. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சியில், அவர் தொடர்ந்து பேசுகையில்—

தமிழர்களின் சாத்வீகப் போராட்டத்துக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு இராணுவப் பலத்தைப் பிரயோகித்து, அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட போதும் — தமிழர் போராட்டம் நாடாளுமன்ற அரசியலுக்குள் சிக்கிக் கொண்ட போது அதனை மீட்டெடுத்து அடுத்த தலைமுறையினர் அப்பணியைத் தொடர தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டவர் கோவை—என்றார்.

டாக்டர் திருமதி திரு. கோபாலரத்தினம் பேசுகையில்;

அரசியல் நீரோட்டத்தில் மாற்றம் வேண்டி சுதந்திரம் என்ற மந்திரத்தை சிங்கள இனவாத அரசுக்கு எதிராக தன் பேனா மூலம் உச்சரித்தவர் கோவை மகேசன் ஆவார் — என்றார்.

திரு. கணபதிப்பிள்ளை தனது தலைமை உரையில்—

எழுத்தாளன் சமுதாயத்தின் கண்ணாடி. உணர்ச்சிக் கருத்துக்களை இலட்சிய நோக்கில் பேனா ஊடாக வெளிக் கொணர்ந்து, மக்களின் எழுச்சிக்கு உந்து சக்தியாக விளங்கும் எழுத்தாளர்களும் எமது விடுதலைப் போர் முனையில் நிற்கும் போராளிகளே—என்றார்.

## பண்டத்தரிப்பு கோட்ட பாடசாலைகளை வேறு இடத்தில் இயங்க வைக்க முயற்சி

பண்டத்தரிப்புக் கல்வி கோட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இயங்க முடியாத நிலையில் இருக்கும் பாடசாலைகளை வேறு கோட்டங்களின் பாடசாலைகளில் தற்காலிகமாக இயங்க வைக்கும் முயற்சியில் கல்விப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பாடசாலைகளை வேறிடங்களில் இயங்க வைப்பது தொடர்பாக அதிபர்கள் கோட்டக் கல்வி அதிகாரிகள் மட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்று வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நேற்றைய கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்தார்.

பாடசாலைகளை வேறு இடங்களில் இயங்க வைப்பது தொடர்பான இறுதி முடிவு நாளை திங்கள் காலை வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள கூட்டத்தில் எடுக்கப்படும் என்றும் — தற்காலிகமாக இயங்கவுள்ள இடங்கள் பற்றிய விவரம் நாளை வெளியிடப்படும் என்றும் பணிப்பாளர் தெரிவித்தார். (உ-5)

## எழுச்சிக் கூத்து

யாழ்ப்பாணம், ஆக, 30

யாழ், குடாநாட்டின் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தற்போது மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளை விளக்க "போர் முனைக்குச் செல்வோம்" என்ற போர்க்கால எழுச்சிக் கூத்து தற்சமயம் பல இடங்களிலும் நடத்தப்பட்டுவருகிறது. (உ-5)

## ஆஸி அணி 247 ஓட்டங்கள்

கொழும்பு, ஆக. 30

கொழும்பு செத்தாராம ஸ்டேடியத்தில் நடைபெற்று வரும் இலங்கை அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்கும் இடையிலான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று ஆஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது.

மழை காரணமாக நேற்று ஆட்டம் இடையில் நிறுத்தப்பட்டபோது இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 8 பந்து வீச்சுகளை மட்டுமே சந்தித்து, ஓட்டமெதுவும் எடுக்காமலிருந்தது. மூன்றாவது நாள் ஆட்டம் இன்று நடைபெறும். நாளை ஓய்வு நாளாகும். (உ-10)

### விசர் நாய்கடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பில் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

விசர்நாய்க் கடிக்கான தடை மருந்து இல்லாததால் புதிதாக நாய் கடிக்குச் சிகிச்சை பெற வருவோர் வவுனியா ஆஸ்பத்திரிக்குச் செல்லுமாறு கேட்கப்படுகின்றனர். இப்போது கையிருப்பில் உள்ள மருந்து பழைய நோயாளர்களுக்குக் கொடுப்பதற்கே போதாது என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் விளக்கமளித்தன. (அ-15)

### யாழ். கரையோரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியது.

அதன் பின்னர் மீண்டும் மாலை 4.30 மணியவில் வந்த 'அவ்ரோ' விமானம் ஒன்று நகரையும் அதனை அண்டிய பகுதிகளையும் பல தடவைகள் சுற்றி நோட்டமிட்டது.

விடுதலைப் புலிகளிடம் தாம் பறிகொடுத்த படகைத் தேடும் முயற்சியாகவே ஹெலி மற்றும் அவ்ரோ ஆகியன குடாநாட்டில் நேற்று அடிக்கடி நோட்டமிட்டபடி [illegible] இருந்தன என்று கருதப்படுகிறது. (இ-5-15-51-69)


# தேன் சுரபி

சைவ உணவகம்

"மதிய உணவு"

நண்பர்கள், வாடிக்கையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட சலுகையுண்டு.

பலாலி றோட்,
திருநெல்வேலிச் சந்தி.
(சி-3207)


## மரண அறிவித்தல்கள்

தாவடி

### திருமதி அன்னலட்சுமி சிவப்பிரகாசம்

அன்னலட்சுமி சிவப்பிரகாசம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்களின் மனைவியும், கமலா சந்திரவர் (அவுஸ்திரேலியா, முன்னைநாள் ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) யசோதா, ரமுணேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், சந்திரவர் (அவுஸ்திரேலியா, முன்னைநாள் அஞ்சலதிபர்), சிவசுப்பிரமணியம் (இணுவில்), தருமலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், சோபனா, பிருந்தாபன் (இருவரும் அவுஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இறுதிக் கிரியைகள் தாவடியில் அவரது இல்லத்தில் இன்று நடைபெற்று பகல் 10 30 மணியளவில் தாவடி மயானத்திற்குத் தகனத்திற்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இ. சிவசுப்பிரமணியம்
(மருமகன்)

திருவருளகம்
தாவடி,
கொக்குவில்.
(22357)

திருநெல்வேலி

### திருமதி சத்தியபாமா சண்முகம்

திருநெல்வேலி சேர் பொன் இராமநாதன் வீதியைச் சேர்ந்த திருமதி சத்தியபாமா சண்முகம் நேற்றுக் காலமானார். இவர் ஓய்வுபெற்ற யாழ் மாநகர சபை லிகிதர் முத்தையா சண்முகத்தின் அன்பு மனைவியும், ஹாயத்திரி, வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஷாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசீலாதேவி, சரோஜா, சாந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி தங்கரத்தினம், காலஞ்சென்ற திரு இராசரத்தினம் ஆகியோரின் மூத்த மகளும், காலஞ்சென்ற திரு. முத்தையாவின் மருமகளும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (30-8-1992) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு அன்னவர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகக் கொக்குவில் கனகமரத்தடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள், இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்க.

தகவல்:
மு சண்முகம்
(கணவன்)

திருநெல்வேலி தெற்கு,
யாழ் பாணம்.
(22358)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org